# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

100 1924 - 2023

ந.க.எண். அ1/356/2023, நாள்: 22.08.2023

## காவலர் (WATCHMAN) பணியிடம் நிரப்புவதற்கான விளம்பர அறிவிப்பு

தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் காலியாக உள்ள ஒரு காவலர் (Watchman) காலிப்பணியிடத்தை நிரப்பிடும் பொருட்டு கீழ்க்காணும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் 24.08.2023 முதல் 14.09.2023 வரை அலுவலக வேலை நாட்களில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நேரடியாக அணுகி விண்ணப்பம் பெற்று விண்ணப்பிக்கலாம்.

## காலிப்பணியிடம் விபரம்

| வ. எண் | பதவியின் பெயர் | சம்பள விகிதம் | கல்வித் தகுதி | இனச்சுழற்சி மற்றும் முன்னுரிமை | காலிப் பணியிட எண்ணிக்கை | 01.07.2023 அன்றைய தேதியில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | குறைந்தபட்ச வயது | அதிகபட்ச வயது |
| 1. | காவலர் Wathcman | Group-D Level-1 ரூ. 15,700 - ரூ. 50,000 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும் | GT-GL-Priority- கொரோனா தொற்றினாலோ, இதர காரணத் தினாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) | 1 (ஒன்று) | 18 | GT-பொது பிரிவினர் 32<br>GT-BC, MBC/ DNC -34<br>SC/ST அருந்ததியர் 37 |

**விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவண நகல்கள்:**

1. கல்விச்சான்று, மாற்றுச்சான்று (TC)
2. சாதிச்சான்று
3. ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை
4. பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
5. வேலைவாய்ப்பு அடையாள அட்டை
6. கொரோனா தொற்றினாலோ, இதர காரணத்தினாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன் / மகள்) என்பதற்கான சான்று.

இவ்விளம்பரத்தின் அடிப்படையில் பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **14.09.2023 மாலை 5.45-க்குள் தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், எபனேசர் டைல்ஸ் ஷோரூம் பின்புறத்தில் வார்டு எண். -5, கதவு எண். 168/23/24 முகமதியா நகர், குத்துக்கல்வலசை அஞ்சல், தென்காசி - 627 803 என்ற முகவரியில் உரிய ஆவணங்களுடன் நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் வாயிலாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** 14.09.2023 மாலை 5.45-க்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், சரிவர பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்திவைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யவோ மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தென்காசி அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,**
தென்காசி

வெ.ஆ.எண். 131/2023/செ.ம.தொ.அ./தென்காசி

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**